# மாதர் போதினி

No. 286 நவம்பர் 1921 No. 11

12 NOV 1921

## IS IT POSSIBLE WITH GOD?

## தேவனால் கூடுமோ?

சங். 78 : 19

**பழைய ஏற்பாட்டின் கண்டிப்பு:** இஸ்ரவேலர் ஒரு பெரிய பாவத்தைச் செய்யவில்லை. தேவனால் கூடுமோ என்று மாத்திரம் கேட்டார்கள். தேவன் கன்மலையிலிருந்து தண்ணீர் புறப்படச் செய்துவிட்டார். வனாந்தரத்தில் 'அவர் அப்பத்தையும் கொடுக்கக் கூடுமோ?' என்றார்கள். 'கர்த்தர் அதைக் கேட்டுக் கோபங்கொண்டார்.' அவர்களுக்கு இச்சித்தத்தைக் கொடுத்தார். ஆனால் 'அவர்களில் கொழுத்தவர்களைச் சங்கரித்தார்'. அவர்கள் ஆத்துமாக்களில் இளைப்பை அனுப்பினார். தேவனால் கூடுமோ என்பதில் அடங்கிய பாவமென்ன? 'தேவனை விசுவாசியாமலும் அவருடைய இரட்சிப்பை நம்பாமலும்' போனதே. (21 வா.) கர்த்தருடைய பார்வையில் எல்லாப் பாவங்களிலும் மகா கொடியபாவம் அவிசுவாசமே. ஏன் ஈராயிரம் வருஷங்களாக யூதர் இவ்வுலகத்தின் குப்பையாக எண்ணப் படுகிறார்கள்? அவிசுவாசத்தினாலேயே! தேவனை விசுவாசியாமலும் அவருடைய இரட்சிப்பை நம்பாமலுமிருக்கிற கிறிஸ்து சபையே, நீ நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே! 'சர்வ வல்லமையுள்ள தேவனை விசுவாசிக்கிறேன்' என்று சொல்லியும், உன்னைப் பரிசுத்தனாக்கக்கூடிய தேவவல்லமையைச் சந்தேகிக்கிறதென்ன? நீ அழியாதபடி, தேவனை விசுவாசி, அவருடைய இரட்சிப்பை நம்பு.

**புதிய ஏற்பாட்டின் தயாளம்:** அருமை இரட்சகர், தாம் உயிர்த்தெழுந்த நாள் சாயந்தரத்தில் தமது சீஷர் இருவரைச் சந்தித்தார். மூன்று வருஷமாக அவர்கள் அவரால் போதிக்கப்பட்டவர்கள்தான். ஆயினும் தம்மைப்பற்றியும் தாம் முடித்த இரட்சிப்பைப்பற்றியும் மகா

பெரிய அவிசுவாசத்தை அவர்களில் கண்டார். அவர்களும் தேவனை விசுவாசிக்கவில்லை, அவருடைய இரட்சிப்பை நம்பவில்லை. இரட்சகர் அவர்களைப் பார்த்து, 'தீர்க்கதரிசிகள் சொன்ன யாவையும் விசுவாசிக்கிறதற்குப் புத்தியில்லாத மந்த இருதயமுள்ளவர்களே' என்கிறார். (லூக். 24 : 25.) அருமை எஜமான் அவர்களுடைய அவிசுவாசத்தை இன்னமும் சகிக்கிறார். அவிசுவாசிகளான அவர்களுடன் வழிநடந்து போகிறார். 'வேதவாக்கியங்களெல்லாவற்றிலும் தம்மைக்குறித்துச் சொல்லியவைகளை அவர்களுக்கு விவரித்துக் காண்பித்தார்.' (27 வா.) அதினால் அவர்களுடைய 'மந்த இருதயம்' கொழுந்துவிட்டெரிந்தது. விசுவாச அக்கினியை இரட்சகர் அவர்களில் மூட்டிவிட்டார். அவர்கள் கண்களைத் திறந்தார். அவர்கள் 'அவரை அறிந்தார்கள்' (31 வா.) 'இயேசுவையும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும்' அறியாமலும் விசுவாசியாமலுமிருக்கிற மந்த ஆத்துமாவே, இயேசு உன்னையும் தம்முடன் உலாவ வரும்படி கூப்பிடுகிறார். ஒரு வேதாகமத்தை மாத்திரம் கையில் எடுத்துக்கொண்டு காட்டுக்குத் தனிமையாய்ப் போ. அங்கே உன் மீட்பர் உன்னையும் போதிப்பார், உனக்கும் தம்மை வெளிப்படுத்துவார். உன் மந்த இருதயம் அனலாகிவிடும். உன் அவிசுவாசமாகிய பாவம் மகா பெரியது. அதை நிவிர்த்திக்கும்படி அவர் உன்னிடம் கேட்பது மகா அற்பம்—'யேசுவோடு தனியே'! இந்த அற்பத்தையும் செய்யத்தவறி ஆண்டவரை விட்டுவிடாதே. அவர் ஏன் உன்னைக் கைவிடவேண்டும்?

அவிசுவாசத்தின் புத்தியீனம்: 'அவர் கன்மலையை அடித்ததினால் தண்ணீர் புறப்பட்டு நதிகளாய்ப் புரண்டுவந்தது; அவர் அப்பத்தையும் கொடுக்கக்கூடுமோ?' (சங். 78 : 20) என்று இஸ்ரவேலர் சொன்னார்கள். அற்பவிசுவாசி இன்றைக்கு என்ன சொல்லுகிறான்? 'ஆண்டவர் என்னை நீதிமானாக்கினார்; என்னைப் பரிசுத்தவானாக்கவும் அவரால் கூடுமோ?' என்கிறான். புருஷனை அறியாத கன்னிகை ஒரு குமாரனைப் பெறுவது எப்படி என்று கேட்டதற்கு தேவதூதன் உத்தரவாக: 'தேவனால் கூடாதது ஒன்றுமில்லை' என்றான். ஏழை ஆத்துமாவே, தேவவல்லமையைச் சந்தேகிக்காதே. 'உமக்குச் சித்தமானால் என்னைச் சுத்தமாக்க உம்மால் கூடும்' என்று குஷ்டரோகியைப் போலாகிலும் சொல்லேன்! 'நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது. தேவன் நம்மை...பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார்.' (1 தெச. 4 : 3, 7.) தேவசித்தம் தெளிவாயிருக்கிறது அதைச் சந்தேகிக்கவேண்டியதில்லை. வல்லமையையும் சந்தேகிக்

காதே. அது புத்தியீனம். தண்ணீருக்கு அற்புதம் செய்த ஆண்டவர், ஆகாரத்துக்கு அற்புதம் செய்யக்கூடாதாம்! கன்மலையைப் பிளந்த ஆண்டவர், காடைகளை வரச்செய்யக்கூடாதாம்! என்ன புத்தியீனம்! கன்மலையைப் பிளந்தாற்போல தமது திருக்குமாரனின் திருவிலாவைப் பிளந்து அதிலிருந்து சர்வலோகத்தின் பாவங்களையும் போக்கக் கூடிய இரத்தம் நிறைந்த ஜீவநதியைப் புரண்டோடச் செய்த ஆண்டவர், தமது சர்வவல்லமையால் உன்னைக் காக்கக்கூடாதா? 'விசுவாசிக்கிறேன், ஆண்டவரே, என் அவிசுவாசம் நீங்க உதவிசெய்யும்' என்று தாமதமின்றி உடனே கெஞ்சு. 'என்னை என்றும் சுத்தனாய், உம்மால் வைக்கக்கூடுமே' என்று நீயும் உன் ஜீவநாளெல்லாம் நம்பிப் பாடு.

**விசுவாசியின் விருந்து**: தேவனால் கூடுமோ? ஆம், அருமை இரட்சகரால் வனாந்தரத்தில் விருந்து செய்யக்கூடும். வனாந்தரத்தில் தான் அவர் அற்புதமாய் ஐயாயிரம்பேரைப் போஷித்தார். பெலவீன விசுவாசியே, உனக்குள்ள கொஞ்சத்தைக்கொண்டு தனிமையான இடத்தில் போய் இயேசுவைச் சந்தி. அவருடைய வல்லமையைச் சந்தேகித்துக்கொண்டு பாவத்தில் நிலைத்திராதே. விசுவாசியே, நீ விசுவாசியாயிரு; விசுவாசியைப்போல பேசு. தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல் என் பாவங்களைச் சுமந்துதீர்க்கும்படி எனக்காக அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடேகூட மற்றெல்லாவற்றையும், விசேஷமாய் அவருடைய பரிசுத்தத்தையும் எனக்கு அருளாதிருப்பது எப்படி? என்று சொல்லு. (ரோ. 8 : 32.) அவிசுவாசிக்கும் விசுவாசிக்கும் எவ்வளவு வித்தியாசம்! என்னை அவர் பரிசுத்தமாக்கக்கூடுமோ என்று அவிசுவாசி சொல்லுகிறான். என்னை அவர் பரிசுத்தமாக்காதிருப்பதெப்படி என்று விசுவாசி சொல்லுகிறான். அவிசுவாசியே, வந்துபார். கிறிஸ்துவானவர் இன்றைக்கும் வனாந்தரத்தில் விருந்து செய்கிறார்; சத்துருக்களுக்குமுன் பந்தியை ஆயத்தம் செய்கிறார். சத்துருக்களின் திரள் சோதனையின் மத்தியில் அவரும் நீயும் நித்திய விருந்து கொண்டாடலாம். உன் எஜமான் வனாந்தரத்தில் 'அவர்களுக்கு வேண்டியமட்டும் கொடுத்தார்; எல்லாரும் புசித்து திருப்தியடைந்தார்கள்.' (யோ. 6 : 11.) உனக்கும் அவர் அப்படிக் கொடாதிருப்பதெப்படி? அவரைத் தேடி நீயும் தனிமையாய்ப் போ. எவ்வளவாக நீ அவருடன் வனாந்தரத்தில் விருந்துண்கிறாயோ, அவ்வளவாக உன் இருதய விருந்து ஓய்வில்லாதிருக்கும். உன்னுடன் விருந்துண்கிறவராய் அவர் உன் இருதயத்தில் உன் ஜீவநாளெல்லாம் வீற்றிருப்பார். அப்பொழுது, திடீரென ஒருநாளில் இந்த வனாந்தர விருந்துசாலையி

விருந்து ஆட்டுக்குட்டியானவருடன் முகமுகமாய் நித்திய விருந் துண்ணும்படி ஒரு க்ஷணப்பொழுதில் மகிமையின் விருந்துக்கு எறெடுத்துக்கொள்ளப்படுவாய். அதுவரைக்கும் அவரை விசுவாசி; அவருடைய இரட்சிப்பை நம்பு.

'அவர்கள் அவருடைய வார்த்தைகளை

—விசுவாசித்து...பாடினார்கள்.
—விசுவாசியாமல்...முறுமுறுத்தார்கள்.'

சங். 106: 12, 24.

## THE SHORTCOMINGS OF THE FAITHFUL

## விசுவாசிகளிடத்தில் காணப்படுகிற பாவம்

'நமக்குப் பாவமில்லை என்போமானால் நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள்ளிராது.' (1 யோ. 1:8.)

'தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யான்; ஏனெனில் அவருடைய வித்து அவனுக்குள் தரித்திருக்கிறது; அவன் தேவனால் பிறந்தபடியினால் பாவஞ்செய்யமாட்டான்.' (1 யோ. 3: 9.)

வெளித்தோற்றத்தின்படி இந்த இரண்டு வாக்கியங்களும் ஒன்றுக்கொன்று நேர்விரோதமாய்த் தோன்றலாம். ஆயினும் அவைகள் விரோதமானவைகளல்ல. இரண்டும் சத்தியமே. அவைகளில் ஒன்றைமாத்திரம் பிடித்துக்கொண்டு பிடிவாதம் சாதிப்பது சத்தியத்திற்குத் துரோகம். ஒன்றுக்கொன்று விரோதமாய்த் தோன்றுகிற இந்த இரண்டு சத்தியங்களையும் பரிசுத்த யோவான் தமது முதலாம் நிருபத்தில் அருமையாய் ஐக்கியப்படுத்தியிருக்கிறார். அவை இரண்டும் பொருந்துகிறபோதுதான் விசுவாசிகளிடத்தில் காணப்படுகிற பாவத்தைக் குறித்த தேவசத்தியம் விளங்கும். கிறிஸ்தவனே, முதல் வாக்கியத்தை மாத்திரம் பிடித்துக்கொண்டு, பாவத்தின்மேல் பாவம் செய்கிறதற்குப் போக்குச்சொல்லாதே. மனச்சாட்சி அறியச்செய்த பாவத்திற்குப் போக்குச்சொல்லுகிறவன் இன்னமும் குணப்படாதவன் என்பது நிச்சயம். பரிசுத்த யோவான், விசுவாசிகளிடத்தில் காணப்படுகிற பாவத்தைக் குறித்து, தமது முதலாம் நிருபத்தில் எழுதுகிறவைகளை இங்கே சுருக்கமாய் எடுத்தெழுதுகிறோம். அவைகளைப் பூரணமாய் அறிய விரும்புகிறவர்கள் பரிசுத்த ஆவியானவருடைய பாதத்திலிருந்து அந்த நிருபம் முழுவதையும் படிப்பீர்களாக!

## முதலாவது : விசுவாசியில் காணப்படுகிற பாவம்

1-வது : நாம் குணப்படுமுன் செய்த சகல பாவங்களையும் அடிக்கடி நினைக்கவேண்டும். 'நாம் பாவம் செய்யவில்லை என்போமானால் அவரைப் பொய்யராக்குகிறவர்களாயிருப்போம்.' (1 : 10.) நான் ஒருக்காலும் பாவஞ்செய்யவில்லை என்று நம்மில் யார் சொல்லுவோம்? ஆனால் நாம் அடிக்கடி 'முன் செய்த பாவங்களறச் சுத்திகரிக்கப்பட்டதை மறந்து' விடுகிறோம். (2 பே. 1 : 9.) நாம் ஒருக்காலும் பாவஞ்செய்யாதவர்கள் போல மற்றவர்களைப்பற்றிக் கடினமாய்த் தீர்ப்புச்செய்கிறோம். நம்மில் பாவம் செய்யாதவர்கள் தீர்ப்புச்செய்யட்டும். மற்றவர்களை 'கர்த்தர் வருமளவும் காலத்துக்கு முன்னே யாதொன்றைக் குறித்தும்' தீர்ப்புச் செய்யாதிருப்போமாக. கர்த்தர் கிருபையாய் மன்னித்த கடந்த காலத்தின் பாவங்களை நினைத்து நம்மைத் தாழ்த்துவோமாக!

2-வது : விசுவாசிகளானபின் செய்கிற சகல பாவத்துக்கும் காரணமாயிருக்கிற பாவப்பிரமாணமாகிய மாம்சம் ஜீவநாளெல்லாம் விசுவாசிகளில் இருக்கும். 'நமக்குப் பாவம் இல்லை என்போமானால் நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம்.' (1 : 8.) பாவம் செய்வதைப்பற்றி இந்த வாக்கியம் சொல்லாமல், பாவத்துக்கு இழுக்கிற மாம்சம் நம்மில் இருக்கிறதென்று மாத்திரம் சொல்லுகிறது. பாவம் செய்வதற்குப் போக்காக அல்ல, பாவஞ்செய்யாதிருக்க எச்சரிப்பாக இந்த வாக்கியம் எழுதப்பட்டது. வெட்டாந்தரைக்குள் புல்லின்வேர் மறைந்துகிடப்பதுபோல, விசுவாசிக்குள் பாவவேர் இருக்கிறது. வேர் இருப்பது இயற்கை. பாவவேர் என்னில் இல்லையென்று சொல்லுகிறவன் வஞ்சிக்கப்பட்டவன். ஆனால் பாவவேருக்குத் தண்ணீர் பாய்த்து, பாவகிரியையை முளைக்கச்செய்வது குற்றம். ஆகையால் விசுவாசியே, நீ பெற்ற தேவகிருபையை இழந்துபோகாதபடிக்கும், உன்னிலுள்ள கசப்பான பாவவேர் முளைத்தெழும்பி கலக்கமுண்டாக்குகிறதினால் அநேகர் தீட்டுப்படாதபடிக்கும் எச்சரிக்கையாயிரு. (எபி. 12: 15.)

3-வது : ஓயாமல் கிறிஸ்துவின் இரத்தத்தால் சுத்திகரிக்கப்படவேண்டிய அறியாமையின் பாவம். (7 வா.) செய்யத்தக்கவைகளில் எத்தனையோ காரியங்களை விசுவாசி செய்யாமல் விடுவதுண்டு. தேவனை முழு இருதயத்தோடும், பிறனை தன்னைப்போலவும் நேசிப்பதில் எந்நாளும் குறைவுண்டு. கவலைத்தாழ்ச்சியினால் அல்லது பாவமான பதஷ்டத்தினால் ஒருவேளை விசுவாசி வார்த்தையினாலாவது செய்கையினாலாவது குற்றஞ்செய்துவிட்டு, பின்பு தான்

செய்தது குற்றமென்று அறியலாம். நிர்நிமித்தமாய்ப் பலர் விசுவாசியின் நடக்கையால் இடறலடைந்திருக்கலாம். அறிவுக்குறைவினால் தற்காலத்தில் செய்யும் பலகாரியங்கள், பிற்காலத்தில் அதிக அறிவடையும்போது பாவமாகத் தோன்றலாம். ஒளியில் அதாவது கர்த்தருடைய சமுகத்தில் எப்போதும் நடந்துவருகிற விசுவாசியினிடத்தில் காணப்படுகிற இவ்வித அறியாமையின் பாவங்களை, கிறிஸ்துவின் இரத்தம் ஓயாமல் சுத்திகரித்துக்கொண்டிருக்கிறது. (1 : 7.) இவைகளை அவன் தினந்தோறும் அறிக்கையிட்டு மன்னிப்புக்காகக் கெஞ்சவேண்டும். (1 : 9.) விசுவாசிகளிடத்தில் காணப்படுகிற இம்மூவகைப் பாவங்களையும் முதலாம் அதிகாரத்தில் அப்போஸ்தலன் எடுத்துக்காட்டிக்கொண்டு, அவர்களிடத்தில் காணப்படவேண்டிய பரிசுத்தத்தின் அளவை மற்ற அதிகாரங்களில் காட்டுகிறார்.

(இன்னும் வரும்.)

## Dr. HENRY WILSON

## டாக்டர் ஹென்றி வில்சன்

தெய்வ சுகமானது எனக்குள் ஒரு புதிய மனுஷன் வந்து குடிக்கொள்வதுபோலிருக்கிறது. அது எனக்குள்ளே வருகிறதும் உள்ளே வசிக்கிறதுமான ஒரு புதிய ஆளே அன்றி வேறல்ல. பழைய மனுஷனுக்குள் புதிய மனுஷன் புகுந்து பழையதை புதியதாக்குகிறதைப் பார்க்கிறேன். வேத எழுத்துக்கள் பொருளாக மாறுகிறது. 'கிறிஸ்து உன்னில் மகிமையின் நம்பிக்கையாயிருக்கிறார்' என்கிற திவ்விய வசனம் யதார்த்தமாய் மாம்சமாகவும் இரத்தமாகவும் எலும்பாகவும் மாறுகிறது. 'விசுவாசத்தினால் கிறிஸ்து என்னில் வாசஞ்செய்கிறார்' என்கிற அருமையான வாசகமானது வேத புஸ்தகத்தின் ஏட்டிலிருந்து மனிதனுடைய இருதயத்துக்குள்ளும் நரம்பு எலும்புகளுக்குள்ளும் பாய்ந்து சென்று அவைகளைப் பலப்படுத்துகிறது. ஜீவ அப்பம், ஜீவத்தண்ணீர் முதலியவைகளைப் பற்றி நமது இரட்சகர் சொன்னவைகளெல்லாம் ஆவியின் சம்பந்தமாய்மட்டுமல்ல; சரீர சம்பந்தமாயு மிருக்கிறது. சுருக்கிச் சொல்லவேண்டுமானால் கர்த்தருடைய வார்த்தை இங்கிலீஷ், பிரெஞ்ச், ஜெர்மனிய பாஷைகளில் புதிதாய் மொழி பெயர்க்கப்படாமல் ஆவிக்குரிய ஆகாரமாகவும் மூளைக்குரிய உணவாகவும் சுகத்துக்குரிய இரத்தமாகவும் சுகாதாரமாகவும் மாறுகிறது. நமக்குள் அற்புதமாய்

வாசஞ்செய்யும் இயேசுகிறிஸ்துவின் சரீரத்தினுல் தேவ சுகமானது புரண்டு ஓடும் ஜீவ நதியைப்போல நமக்குள் பிரவாகித்து ஓடி நம்மை எப்போதும் செழிப்பாக்கிப் பூரிக்கச் செய்கிறது. வார்த்தைகள் பிரத்தியட்ச அனுபவமும், எண்ணங்கள் பொருளாகவும், கருத்துகள் பிராணுதாரமாகவும் மாறுகிறது. இரத்தத்தால் நிறைந்த ஒரு ஊற்றுண்டு என்பது புதிதும் ஜீவனுமான விதமாய் நிகழ்காலத்துக்குரிய சத்தியமாகுகிறது. எப்படி எசேக்கியாத் தீர்க்கதரிசனத்தில் கண்ட நதியானது பாய்ந்த இடமெல்லாம் சகலத்தையும் செழிப்பித்து உயிருண்டாக்கி அசையச் செய்ததோ, அப்படியே நமக்குள்ளே இருக்கப்பட்ட உயிர்ப்பிக்கும் ஆவியாகிய நதியும் நம்மை நித்தமும் செழிப்பாக்கி திடப்படுத்திப் பலப்படுத்துகிறதாயிருக்கிறது. கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சரீரத்திலிருந்து இடைவிடாமல் நமக்குள் பாய்ந்துகொண்டிருக்கும் ஜீவனுனது நம்முடைய தினசரி ஜீவிய சமுத்திரத்தில் பாயும் நீரோட்டமாயிருக்கிறது. இந்த உயிர்ப்பிக்கும் ஜீவனுனது வெகு அமைதலாய் நம்முடைய சரீரத்தையும் நமக்குள் மறைந்திருந்து வேலைசெய்யும் மற்றும் ஜீவக்கருவிகளையும் பலப்படுத்துகிறது. நம்முடைய முழு ஜீவியத்திலும் ஒரு புதிய அனுபவத்தை உண்டாக்குகிறது. இங்கிலாந்து தேசமானது அதைச் சுற்றிலுமிருக்கிற உஷ்ண நீரோட்டத்தால் பசுமையும் செழிப்புமாயிருக்கிறது. ஆனுலோ அதைப்போன்ற உத்திராட்டத்திலிருக்கும் மற்ற தேசங்கள் அவ்விதமான நீரோட்டமில்லாமையால் குளிரால் வறண்டு போயிருக்கின்றன. அவ்விதமாகவே இந்த ஆவியின் ஆற்றில் மூழ்கின ஆத்துமாவும் சரீரமும் எப்பொழுதும் பச்சையும் பசுமையும் பலமுள்ளதுமாயிருக்கும். அப்படி முழுகாத மற்ற ஆத்துமாக்களோ குளிர்ந்து வறண்டு முதிர்ந்துபோய்விடும்.

கடந்த 21 வருஷமாய் இவ்வித அற்புத தேவசுகத்தை நான் பெற்றனுபவித்து வருகிறேன். ஆத்துமாவிலும் ஆவியிலும் ஏற்கனவே தங்கியிருக்கும் கிறிஸ்துவின் ஜீவன் என் சரீரத்தில் இடைவிடாமல் பாய்ந்து ஓடுகிறதைப் பார்க்கிறேன். அதே ஜீவன் சாவுக்கினமான பாண்டத்தை நிரப்பி உயிர்ப்பிக்கிறது. அது மெய்யான ஜீவனுள்ள வகையாய் மாமிசத்தில் வெளிப்பட்ட ஜீவனே. மனுஷ சரீரம் கிறிஸ்துவின் மாம்சத்தோடு இணைக்கப்பட்டிருப்பதால் பரிசுத்தமுள்ளதும் சுகமுள்ளதும் பலமுள்ளதும் ஊழியத்திற்கு வேண்டிய சகலத்தையும் செய்யத்தக்க சக்தியுள்ளதுமாயிருக்கிறது. நம்முடைய மனுஷீகத்துக்குரிய பாகம் தெய்வீகத்தைப்போல மகிமையுள்ளதாயிருக்கிறது. சடப்பொருள் மெய்ப்பொருளாகுகிறது. ஏனென்ருல் மெய்யான தேவன் அதில் சஞ்சரிக்கிருர். நம்முடைய ஆவிமட்டு

மல்ல சரீரமும் தேவத்தன்மையில் பங்கு பெறுவதால் சடப்பொருள் திவ்வியபொருளாகுகிறது. இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும் பொருட்டு மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. (2 பேதுரு 1 : 4.) நித்தியஜீவனைப் பெற்றிருப்பதால் சடப்பொருள் நித்தியத்துக் குரியதாகுகிறது. குமாரனை உடையவன் ஜீவனை உடையவன். சடப்பொருள் மகிமைக்குரியதாகுகிறது. ஏனென்றால் மகிமையான கர்த்தர் அங்கே வசித்து எல்லாவற்றையும் தமக்குக் கீழ்ப்படுத்திக் கொள்ளத்தக்க தம்முடைய வல்லமையான செயலின்படியே நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்துக்கு ஒப்பாக மறுரூபப்படுத்தும் அனுபோகத்தை ருசிக்கச் செய்கிறார். இவ்விதமாய் நாம் தேவ சுகத்தை அறிந்துகொண்டால் சரீரத்துக்கு அது ஜெயத்தைக் கொடுக்கும் ஜீவியமாக இருக்கும்.

## CHRIST MY REFUGE

## கிறிஸ்து என் அடைக்கலம்

('என்னை ஜீவபலியாய் ஒப்புவித்தேன்' என்ற இராகப்படி பாடலாம்.)

இராகம், சங்கராபரணம். ஆதிதாளம்.

பல்லவி

உந்தன் பாதாரவிந்தம் அடைந்தேன்
சொந்தம் பாராட்டுந் தேவே.

அனுபல்லவி

எந்தன் பாவம்போக்க வுந்தன் திருரத்தம்
சிந்தினதா லென்னை யென்றுங்காக்க நியாயம்.

1. தங்க லோகம் விட்டாய் தமியருக்காய்
சங்கை யெல்லாந் துறந்தாய்
அங்கம் வதைபடத் தீயர்கையி விட்டாய்
துங்கனே என்துயர் தீர்க்க வல்லவனாய்.

2. நிந்தை யெல்லாம் சகித்தாய் ஈடேற்றம்
தந்து காக்க வந்தாய்
சிந்தை நொந்துமிகத் தேடிவந்தே னய்யா
பந்தங் குலைக்க வேறாரில்லை ஏசையா.

3. தேசத்தில் பாடு பட்டாய் கொடும்
நோக வைங்காயங் கொண்டாய்
சாகத் தீர்ப்புப்பெற்ற பாவியென் பேரிலே
தாகமாகத் தேடி வந்ததி னாலேயே.

4. பரிசுத்த மென்னி லில்லை யாதொரு
பரிசுத்த செய்கை யில்லை
பரிசுத்த வித்தாய் முளைத்த பராபரா
பரிவாக வுந்தன் பரிசுத்தந்தா கோவா.

5. திக்கற்ற பாவி ஐயா எளியேன்
எக்குற்றஞ் செய்தோன் மெய்யாய்
சக்தியற்ற பெருஞ் சண்டாளப் பாவிதான்
தக்க வுதவிசெய்யத் தகுந்த சமயமையா.

6. ஆவி ஆத்மா சரீரம் ஆஸ்தியும்
மேவி உமது பாதம்
பாவி படைக்கிறேன் சொந்தக் காணிக்கையாக
தாவியே யுன்னன்பால் தாங்கி யேற்றுக்கொள்ளும்.

7. என்னைக் கண்ணோக்கு மய்யா அடியேன்
உன்னைக் கண்ணோக்கினேன் துய்யா
அன்னைதந்தை சுற்றம் பெந்துஜனம் நீயே
இன்னமென் ரோகத்துக் கேற்ற பரிகாரிநீ.

8. வேதத்தையும் தந்தாய் புவியர்க்கு
விதவித நன்மை ஈந்தாய்
இதயத்தி லானந்த பாக்கியமுந் தந்தாய்
வேதநாயகன் கவிபாடிடவுஞ் செய்தாய்.

V. D. K.

## THREE KINDS OF WOMEN

## மூவகை ஸ்திரீகள்

பணம், பணம் என்னுந் தொனி நமது இரு காதுகளும் செவிடு படத் தொனித்துக்கொண்டிக்கிறதறிவோம். வீட்டிலும் வெளியிலும், கனவிலும் நினைவிலும் சிலருக்குப் பண ஏக்கமே பேரேக்கம். 'பணம் என்றால் பிணமும் வாயைத் திறக்கும்', 'பணமில்லாதார்

நடைப்பிணமாவர்', 'பொருளில்லார்க் கிவ்வுலகமில்லை', 'தங்கச் சாவி எந்தப் பூட்டையுந் திறக்கும்', 'இலக்ஷ்ப்பிரபு', 'கோடீஸ் வரன்'—இவைபோன்ற வழக்கச் சொற்களையும், பணக்காரர் சர்வ வல்லமை படைத்தவர்கள்போல் போற்றப்பட்டு, சாகாவரம் பெற்ற வர்கள்போல் பேசப்படுவதையும் கவனிக்குங்கால், நமது நாட்டில் பணத்துக்குரிய மதிப்பு இவ்வளவென்பது தெரியவரும். ஸ்திரீகள் பணவிஷயமாய் நடந்துகொள்ளும் நடபடிகளைக்கொண்டு அவர்களை **உலோபி, ஊதாரி,** உதாரி என்ற மூவகுப்பினராகப் பிரிக்கலாம்.

I. **உலோபி.** பணத்தின்மேலுள்ள பேராசையை உலோபத் துவம் எனவும், பணத்தின்மேல் பேராவலுடையவளை **உலோபி** எனவும் அழைப்போம். வைக்கோல் போர்மேல் படுத்திருந்த நாய் தானுந் தின்னமல், வைக்கோல் தின்ன வந்த பசுவையுந் துரத்தின கதை போல், உலோபி பணத்தில் புரளுவதன்றி அதைத் தானனுபவியாள், பிறருக்குங் காற்காசுமீயாள். இவள் எந்தக் காலத்திலாவது வாய்க்கு இதமான உணவு விலாப்புடைக்கத் தின்றதுண்டானல் அது பிறர் வீட்டில்தான். இவள் எப்போதாவது நல்ல வஸ்திரந் தரித்ததுண்டானல் அது வண்ணான் தப்பிதத்தினல்தான். எச்சிக்கையினல் காகத்தை ஓட்டமாட்டாள். செப்புக்காசை வெள்ளி நாணயமாக்கி, ரூபாயைத் தங்கக் காசாக்கி, பாங்கில்போட்டும், கடும் வட்டிக்குக் கொடுத்தும் பணத்தைப் பெருக்குவாள். இந்த உலகத்துப் பணம் மறு உலகத்தில் செல்லாது என்பதை மறந்தவள்போல் விருத்தாப்பிய தசையில் பணத்தைச் சேர்ப்பதொன்றே அவள் நோக்கமாகவிருக்கும். பரம லோகத்தில் பணஞ்சேர்த்து வைக்கும் முறை அவளுக்குத் தெரியாது. தம்படிக்கு உயிரிழக்கப் பார்த்த ஈயாப்பத்தன் கதைபோல் தம்படிக்கும் நாக்கைப் பிடுங்கப் பார்ப்பாள். இயேசு இப்படிப் பட்டவளைப் பார்த்து, 'ஒருத்திக்குத் திரளான ஆஸ்தி இருந்தாலும் அது அவளுக்கு ஜீவனல்ல' என்றும், 'உனக்கு உண்டானவைகளை யெல்லாம் விற்றுத் தரித்திரருக்குக் கொடு, அப்பொழுது பரலோகத் திலே உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும்; பின்பு என்னைப் பின்பற்றிவா' என்றும் சொல்லுவார். ஆதலால் உலோபத்துவம் இயேசுவின் சீஷிக்குரிய இலக்ஷணமல்ல.

II. **ஊதாரி.** வரவுக்குமிஞ்சப் பணத்தைச் செலவிடுதல் ஊதாரித்தனம் அல்லது ஆராதூரித்தனம் என்றழைக்கப்படும்; ஆலோசியாது பணத்தை வாரி இறைப்பவள் **ஊதாரி** அல்லது **ஆராதூரி** என்ற பெயர் படைப்பாள். இவளுக்குப் பணம் ஓர் பெரிய காரியமல்ல. புசிப்பதும், குடிப்பதும், மகிழ்வதுமேயல்லாமல் சூரியனுக்குக் கீழே வேறொரு நன்மையும் இல்லையென்றூற்போல் நடப்பாள்.

இவள் வீட்டில் கறிவகைகளுக்குக் கணக்கிராது; நெய்யும் பாலும் தண்ணீர் படும் பாடுதான். 'கடன்பட்டும் குமருகரையேற்று' என்று சொல்லிக்கொண்டே வட்டிக்குப் பணம் வாங்கிக் கலியாணத்தைச் சிறப்பிக்கவென்று டம்பாச்சாரத்தில் இறங்கிவிடுவாள்; வட்டி கொடுத்தாலும் வாங்கின கடன் கொடாள். இவளும் இவள் வீட்டாரும் தங்கள் நிலைமைக்கு மேற்பட்ட ஆடை ஆபரணங்கள் தரித்து, பிரபுக்கள் குலத்தைச் சேர்ந்தவர்கள்போல் காணப்படுவார்கள். உலோபியைத் தன் காலிலொட்டின தூசிக்குச் சமமாகப் பாவித்து, உலோபி என்ற பேர் படைப்பதிலும் உயிரிழப்பது வாசி என்பாள். பானையில் பதக்கு உண்டானால் உலையில் மூக்குருணி வேகும். கையில் கால் நூறு கிடைத்தால் அவள் உள்ளத்தில் ஒரு கோடி நினைவு உதிக்கும். கடவுள் மேல் முழு நம்பிக்கை யுடையவள்போல் நடித்து, நாளைத்தினத்தைக் குறித்துக் கவலைப்படலாகாது என்பாள். இவள் அந்தியகாலம் இவளுக்கே கசப்பாயிருக்கும். கடன் தீர்க்க வழிவகையற்று, மூச்சுக்கு முன்னூறு பொய் பேசி, பிறர் பணத்தில் கைவைத்து, கடைசியில் மனம் நொந்து, நம்பிக்கையற்றவளாக மரிப்பாள். இவள் பேர் எல்லாருடைய நாவிலும் பழிச்சொல்லாகவிருக்கும். உலோபிக்காக ஒருவேளை நாம் பரிந்துபேசத் துணியலாம்; ஆனால் ஊதாரிக்காக நம்மிடத்தில் நல்வாக்கு ஒன்றுகூட இல்லை. ஏனென்றால், உலோபி தன் ஜீவகாலத்தில் யாருக்காவது நன்மை செய்தவளல்லவென்றாலும் தீமை செய்தவளுமல்ல; மேலும் தன் மரணத்துக்குப் பின் பிறரைத் திரவியசம்பன்னராக்குகிறாள். ஆனால், ஊதாரியோ சில பெருவயிற்றுச் சோம்பேறிகளையும், உயிரோடே உடலைச் சாப்பிடும் இச்சகர்களையும் சிறிதுகாலம் போஷித்தபோதிலும் ஊரைக்கொள்ளையிடுவதன்றி, தன் புருஷனையும், மக்கள் மனுஷரையும் படுகுழியில் இறக்குவாள். இப்படிப்பட்ட வெட்கமற்ற ஆராதூரியை நோக்கி கர்த்தருடைய சத்தியவேதம், 'இவையெல்லாவற்றின் நிமித்தமும் தேவன் உன்னை நியாயத்திலே கொண்டுவந்து நிறுத்துவார் என்று அறி' என்று சொல்லுகிறது.

III. உதாரி. வறுமையிலிருப்போர்க்கு இரங்கிக் கொடுக்கும் தருமகுணம் உதாரத்துவம் என்று அழைக்கப்படும்; தருமசிந்தைகொண்டு பிறருக்கு ஈகிறவள் உதாரி என்னுஞ் சிறந்த பேர் படைப்பாள். பணத்தைக் கையாடும் விஷயத்தில் உதாரி நடுவுநிலைமை யுடையவளென்று சொல்லலாம்; இவள் உலோபியைப்போல் தன் வாயைக் கட்டி, வயிற்றை ஒடுக்கவுமாட்டாள்; அல்லது ஆராதூரியைப்போல உண்பதையும் உடுப்பதையுந் தவிர வேறே சந்தோஷ

மில்லை யென்றாற்போல நடக்கவுமாட்டாள். எறும்பும் தேனீயும் இவளுடைய உபாத்திமார் கூட்டத்தைச் சேர்ந்தவைகளானபடியால், சோம்பலைத் தவிர்த்துப் பொருளீட்டியபோதிலும் உலோபியைப் போல அது ஜீவன் என்று எண்ணமாட்டாள். இவள் பசியென்று வந்தோர்க்கு இல்லையென்று சொல்லமாட்டாளாயினும், ஊதாரி யைப்போலிராமல் துணிக்குத் தக்கதாகச் சட்டை வெட்டுவாள். உலோபிக்குரிய தன்னயமும் இவளுக்குக் கிடையாது; ஊதாரி யைப்போல் கடைத் தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைக்கும் புத்தி இவள் கனவிலும் வாராது. கருணை இவள் கண் ணிலும், அநுதாபம் இவள் முகத்திலும், இரக்கம் இவள் இருதயத் திலும் ஜொலித்து விளங்க, தன்னாலியன்றதை எவர்க்கும், எக்காலத் தும், பிரதியுபகாரம் விரும்பாமல் செய்வாள். இரக்கத்தோடுகூட நீதியுமுடையவளாகையால் தன்னையும், கணவன், மக்கள், பெற்றோ ரையும் மறவாள். விருந்தினர் வந்தவிடத்து முகமலர்ச்சியோடு அவர்களை உபசரிப்பாள். இவள் நன்மைசெய்கிறவராகச் சுற்றித் திரிந்த இயேசுவின் சீஷியாகையால், ஒன்றுஞ் சேதமாய்ப் போகாத படி மீதியான துணிக்கைகளைச் சேர்த்துவைத்து, தான்மாளும்போது தன்னை நித்தியமான வீடுகளில் ஏற்றுக்கொள்வாருண்டாகும்படி அநீதியான உலகப்பொருளால் தனக்குச் சிநேகிதரைச் சம்பாதிப் பாள். இவளும் இவள் குடும்பத்தாரும் பிரதிதினமும் முழங்காற் படியிட்டு 'எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்' என்று பிரார்த்திப்பார்கள்.

இதை வாசிக்குஞ் சகோதரிகளே, மேற்கூறிய மூன்று வகுப்பு களில் உங்கள் படம் எந்த வகுப்பில் காணப்படுகிறது? 'பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது' என்பதையும், தங்களைத் தேவபத்தர் எனச் சொல்லிக்கொள்ளுகிறவர்கள் முதலாய் 'அதை இச்சித்து, விசுவாசத்தை விட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக்கொண்டிருக்கிறார்கள்' என்பதையும் அறி யீர்களா? பணவிஷயத்தில்தான் உங்கள் கிறிஸ்தவ ஜீவியம் முதலா வது விளங்கவேண்டும். ஆதலால் 'போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம்' என்று அறிந்து, பணவிஷ யத்தில் பிறருக்கு மாதிரிகளாயிருக்க தேவன் உங்களுக்கு அருள் புரிவாராக.

Y. G. Bonnell, P.B.

## WHAT IS LOVE !

## அன்பாவ தென்ன !

அன்பு என்பதென்ன ? யாருமறியாத ஒன்ருே ! உலகில் அன்பிலாரொருவருண்டோ ? அன்பு எங்கும், யாவரிடத்திலும் இருந்தேயிருக்க, அன்பு, அன்பு என்பானேன் ? பெற்ற தாய்க்குப் பிள்ளையின்மேல் அன்பில்லையோ ? புருஷன் மனைவியின்மேல் அன்பாயில்லையோ ? தந்தை தாய்மீது மைந்தருக்கன்பில்லையோ ? உற்ருர் உறவினர்க்குள் அன்பு திருநடனஞ் செய்யுதில்லையோ ? குரு சீடன்மீதும், சீடன் குருவிடத்தும் அன்பாயிருக்கவில்லையோ? பெரியோர் சிறியோர்மீதும், சிறியோர் பெரியோரிடத்திலும் அன்பு கூருகிறதில்லையோ ? கற்றவர் கல்லார்மீதும், கல்லார் கற்றவர்மீதும் கொள்ளும் அன்பு அன்பல்லவோ ? உள்ளவர் இல்லார்மீதும், இல்லார் உள்ளவர்மீதுங் கொள்ளும் அன்புக்கு அளவு கிடையாதே ! அன்பு சகல நாட்டிலும் மலிந்து வீதி வீதியாய் சுற்றித்திரிகையில், அன்பைக் காணுதார்போல், அன்பு, அன்பு என்பதேனே ! என்பு தோல் போர்த்த உடம்பின் ' இச்சை ' யெல்லாம் ' அன்பு ' எனும் நாமத்தைத் சூடிக்கொள தைரியங்கொண்டதாலல்லோ ? உலகக் கடமையெல்லாம் ' அன்பு ' எனும் கனத்தப் பெயரை கைப்பற்றிக் கொண்டதென்ன துணிவு ! பெருமையெல்லாம் ' அன்பு ' எனும் நாமத்தை தரித்துத் திரிவது சரியோ ? அன்புக்கு நெடுந்தூரமானவையெல்லாம் 'அன்பு' எனும் பெயரைப் பெற்றுக்கொண்டது மா ஆச்சரியமே. உலகத்தில் ' அன்பு ' எனப் பேரெடுத்தவைகளை வேறு பெயரிட்டழைத்தல் நலம். உலக அன்பு குறித்தமட்டுந்தான் செல்லும். மட்டுக்குமேலேக உலக அன்பிற்கு வலிமை யிராது. பொறுமையாகிய பெருங்கடலைக் கடக்கவும், பெருமையாகிய பெருங்கிரியையைத் தகர்க்கவும், கோபமாகிய குன்றுகளை அடியோடு பெயர்த்துப்போடவும், இன்னும் இவைகளுக்கு சம்பந்தமான சகலத்தையும் க்ஷணத்தில் சின்னபின்னப்படுத்திப்போடுந் திறலுடைய ' அன்பை ', பொறுமையினுல் அடியுண்டதும், பெருமையினுல் சீர் கெட்டதும், கோபத்தினுல் குன்றிப்போனதும், மற்றுமுள்ளவைகளால் நிமைப்பொழுதில் கலங்கிப்போகவுங்கூடிய உலக அன்போடு ஒப்பிடப்போமோ ? இக்காலத்தில் விசேஷமாக ' இச்சை ' என்பது உலகத்தில் 'அன்பு' எனும் மாறுவேடம் பூண்டுத் திரிவதால் 'அன்பை' 'தேவ அன்பு ' என்று பெயரிட்டழைப்போமாக. (இது, பொய்

வேதங்களுண்டென உணர்த்தும்பொருட்டு 'சத்திய வேதம்' என்றழைக்கப்படுவதற்கொக்கும். மூச்சுபேச்சற்ற தேவர்களுண்டென்று விக்கிரகத் தொழும்பர் அறிந்துகொள்ளும்பொருட்டு, ஜீவனுள்ள தேவனென்றழைப்பபடுவதற்குச் சரியாகும்.) தேவ அன்பு எல்லையற்றதும் எவராலும் எடுத்தோதப்படாததுமாயிருக்கிறது. தேவஅன்பை உணர்ந்தோத ஒருவர் உண்டென்றால், அவர் தேவனுடைய அளவையும் அழகையுங் கூறுவது அசாத்யமென்கலாமோ? தேவனை ஒருவரும் ஒருக்காலும் கண்டதில்லை, அப்படியானல் அவரன்பை யறிய ஒருவருண்டோ? ஒப்பும் உவமையுமிலாத தேவன் ஒருவர் உண்டென நாமறிந்திருக்கும்வாறே, இவ்வளவு அவ்வளவு என்று பொய்யை யுரைக்கத் துணியாமல், அன்பு தேவனாகவே யிருக்கிறது அல்லது தேவன் அன்பாகவே யிருக்கிறாரெனப் பகருவோமாக. (இதை வாசிக்கும் சகோதர சகோதரியே, அன்பு ஒரு தேவன், ஞானம் ஒரு தேவன், அறிவு ஒரு தேவன் என்றருத்தப்படுத்தாமல், இவைகளெல்லாம் அவர் ஒருவருக்கே உரிய மகிமைகளாதலால், தேவன் என்று சொல்லப்பட்டதெனக் கொள்க.) அறிவுக்கெட்டாத அன்பு! இந்த அன்பை கண்டறிந்தவர் யார்? விசுவாசியைவிட அவிசுவாசியே அதிகமாயறிந்திருக்கவேண்டும். பக்தர்களைக் காட்டிலும் பக்தியற்றவர்களே உணர்ந்திருக்கவேண்டும். ஆனாலும் இவர்களால் அறிந்துகொள்ளக்கூடாது. இவர்களோ காணுக் கண்களும், கேளாச் செவிகளும், உணராத் தலையும், உருகா நெஞ்சமுமுள்ளவர்கள். இவர்கள், தங்கள் அற்ப குற்றங்களை ஒருமுறை மன்னிப்பதைப் போல் இரண்டு மூன்று முறை மன்னித்துவிடும் மனிதனை போற்றக் கற்றுக்கொண்டிருக்கிறார்கள்; ஆனால் பிரதி நிமிஷமும் தங்களின் பெரும்பாவ குற்றங்களை முன்னிட்டு தண்டியாது, பேரன்பினால் பொறுமையாயிருக்குங் கடவுளைப் போற்ற வகையறியார்.

எவராவது அற்ப உதவிபுரிந்தால், அவர்கள் முகத்துக்கெதிரில் ஏதோ நன்றியுள்ளவர்களைப்போல் நடிக்க கற்றிருந்தாலும், அந்த உதவி கிடைக்க கிருபை செய்தவரும் வேறெல்லா உதவியையும் புரிந்து வருகிறவருமாகிய தேவனுக்கு நன்றிசெலுத்த இவர்களுக்குத் தெளிவிராது. நிலையற்ற மனிதனுக்கு அஞ்சி தொண்டுபுரிந்து வரும் இவர்கள் ஆதியந்தமில்லாத கடவுளுக்கஞ்சாமற்றிரியும்ரகசியமென்னமோ! மண்ணிற் புதைத்துப்போடுஞ் சரீரத்தை சவுக்காரங்கொண்டு கழுவவும் ஆடை ஆபரணங்கொண்டு அலங்கரிக்கவும் அவா பூண்ட இவர்கள், மடியாத ஆத்துமா அடையவேண்டிய வாழ்வை நினையாதுலவு மாயமேதோ! இவர்களையும் போஷித்துக் காத்து மனந்திரும்புவார்களாவென புகலொணு ஆவலோடு எதிர்ப்பார்த்திருக்கும் 'அன்பு'

ஆ, மகா ஆச்சரியமான அன்பு, தேவ அன்பு! எண்ணுவதற்கு மனுஷன் எம்மாத்திரம்! அப்படியிருக்க, மனுஷக்கூட்டத்தின் மேல் நிலையாய் நின்ற அன்பு, ஓ, இதென்ன அன்பு! மண்ணான மனுஷனை மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டு மன்பு, இதல்லோ தேவன்பு! 'தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை யடையும் படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்' என்பதை ஓதும் யாவரும், இவ்வளவாய் என்பதை எவ்வளவு என வினவி, அளவிறந்தது என விடைபகர்ந்துகொள்வதற்கு மேலென் செய்வர். மாம்சத்தினாலே பலவீனமாயிருந்த நியாயப்பிரமாணம் செய்யக்கூடாததை தேவனே செய்யும்படிக்கு தம்முடைய குமாரனை மாம்சத்தின் சாயலாகவும் பாவத்தைப்போக்கும் பலியாகவும் அனுப்பி மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்த தேவஅன்பை மனுஷ அறிவினால் அறியப்போமோ? கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கும். அவரிடத்தில் பாவமில்லை; அவரில் நிலைத்திருக்கிற எவனும் பாவஞ்செய்கிறதில்லை. பிதாவானவர் குமாரனில் அன்பாயிருந்து எல்லாவற்றையும் அவர் கையில் ஒப்புக்கொடுத்திருக்கிறார். அவர் தம்முடைய ஜீவனை நமக்காக கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம். குமாரனாகிய திராக்ஷ செடியில் நிலைத்திருக்கும் கொடிகளாகிய விசுவாசிகள் அன்பாகிய மிகுந்த கனிகளைக் கொடுப்பார்கள். குமாரனை உடையவனிடத்திலிருந்து அன்பாகிய ஜீவ ஊற்றுகள் ஓடும், அன்பை வெளிப்படுத்தின கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை அடைந்து கொள்ளுகிறதினால்மாத்திரமே அன்புள்ளவர்களாயிருப்போம். பாவமில்லாதவரே அன்புடையார், மற்றவர் யாரோ. பாவமில்லாதவரைப் பற்றும் மெய்ப்பற்றினால்மாத்திரமே பரிசுத்தமாக்கப்படுவோம். பாவமிலா அவதாரமாகிய நமது இயேசுபகவானைவிட பாவத்தைப் பரிகரிக்கக்கூடியவரார்? இவரைப் பின்பற்றும் மெய்விசுவாசிகள் தவிர மற்றவர், தங்களை அன்புடையாரென்றழைத்துக்கொள்வதை மறுத்து வேறெந்த பெயரையாவது வைத்துக்கொள்வார்களாயின் தங்கள் பாவத்தை குறைத்துக்கொள்வதாகும். கிறிஸ்துவை விசுவாசிக்கும் மெய் விசுவாசிகளெல்லாம் தங்கள் விசுவாசத்தோடே தைரியத்தையும், தைரியத்தோடே ஞானத்தையும், ஞானத்தோடே இச்சையடக்கத்தையும், இச்சையடக்கத்தோடே பொறுமையையும், பொறுமையோடே தேவபக்தியையும், தேவபக்தியோடே சகோதர சிநேகத்தையும், சகோதர சிநேகத்தோடே அன்பையுங் கூட்டி வழங்காதிருப்பாரோ? மெய்யாகவே இயேசுகிறிஸ்துவை அறியும் அறிவு விசுவாசி

களை வீணரும் கனியற்றவர்களுமாயிருக்கவொட்டாது. அன்பினால் கிரியைசெய்கிற விசுவாசமே உதவும். ஒருவரிலொருவர் அன்பாயிருக்கவேண்டுமென்பதே கர்த்தரின் கற்பனை. அன்பானது பிறருக்கு பொல்லாங்கு செய்யாது நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுவதே அவரிடத்தில் அன்புகூருவதாம். அதாவது கிறிஸ்துயேசுவை விசுவாசிப்பதின் அடையாளம் அவர் இட்ட கட்டளைகளைக் கைக்கொள்ளுவதே, மற்றவை வீண்பிதற்றும். அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது; தேவனை அறியாதவர்களிடத்திலும் தேவனுக்கு வெகுதூரமானவர்களிடத்திலும் அன்பெனும் ஆவியின் கனியைத் தேடுவதைவிட, முட்செடியில் அத்திக்கனியை அறுக்க முயல்வது சுலபமல்லோ? அன்புள்ள எவனும் தேவனால் பிறந்து அவரை அறிந்திருக்கிறான்; அன்பிலாதவன் தேவனை யறியான். நமது அன்பு மாயமற்றதாயிருக்கும்படி வசனத்தினாலும் நாவினாலுமல்ல, கிரியையினாலும் உண்மையினாலும் அன்புகூர பாவமில்லா திரு அவதாரநாதன் கிறிஸ்துயேசு சுவாமியின் பரிசுத்த தாளைப் பணிந்து எற்றுவோமாக.

Y. Solomon.

C. L. S. PRESS, MADRAS—1921